<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>

முன்னிலை: செ. பி. பர்வத்ராஜ் ஆறுமுகம், பி. ஏ. பி. எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

2025–ம் ஆண்டு மார்ச் மாதம் 06–ம் நாள் வியாழக்கிழமை

<u>இடைநிலை மனுஎண்.5/2023</u>

இன்

<u>அசல் வழக்கு எண்.616/2019</u>

1. காதர்பாட்ஷா (இறந்தார்)
2. ரஹிமா பீ
3. ஜெய்புன்னிசா
4. சிராஜீனிசா
5. தாஜுல் ஹீதா ....மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. முகமது கனி
2. பதுருதீன் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 30.09.2024–ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. இராதாகிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. சிவசங்கரன் அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

<u>உத்தரவு</u>

இந்த மனுவானது மனுதாரர் /வாதியால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17–ன் படி மனுவில் கண்டவாறு தன்னால் கூறாமல் விட்டு போன புல எண். 44/1C –யை சொத்து விபரத்தில் சேர்த்துத் திருத்த மனுதாரருக்கு அனுமதி வழங்க வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3 ம் வாதி/ மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u>

2) மனுதாரர் அசல் வழக்கில் 3–ம் வாதி என்றும், எனக்கும் 2, 4, 5 வாதிகளுக்கும் சேர்த்து பிரமாண வாக்கு மூலத்தைத் தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு தாவா 'அ' மற்றும் 'ஆ' அட்டவணைச்சொத்துக்கள் மீது தாக்கல் செய்யப்பட்டு அதில் 'அ' அட்டவணைச் சொத்தில் உள்ள 20 1/2 சென்ட்டுக்கு, விளம்புகையும் சுவாதினமும் 'ஆ' அட்டவணைச் சொத்து 6 சென்ட் பொறுத்து 2–ம் பிரதிவாதியால் கட்டப்பட்ட கட்டிடத்தை அகற்றிக் கொடுக்க உத்தர விடவும் தாக்கல்

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.03.06 17:08:44

செய்யப்பட்டுள்ளது என்றும், சொத்து விபரத்தில் சர்வே எண். 44/1C –யினை 44/1B–யுடன் சேர்த்து காட்டும்போது தவறுதலாகக் டைப் மிஸ்டேக்கில் சர்வே எண்.44/1C விடுபட்டுவிட்டது என்றும், அதில் 1–ம் வாதியான தன் தந்தைக்கும் பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றும், தற்பொழுது தான் அது தெரிய வந்தது என்றும், அந்த புல எண். 44/1C என்பது மிகவும் அவசியமானது என்றும், இதில் தான் 2–ம் பிரதிவாதி கட்டிடம் கட்டியுள்ளார் என்றும், எனவே சர்வே எண். 44/1C–யை சேர்க்காவிட்டால் எனக்கு பெருத்த கஷ்டம் ஏற்படும் என்றும், எனவே தன்னால் கூறாமல் விட்டு போன புல எண். 44/1C –யை சொத்து விபரத்தில் சேர்த்துத் திருத்த மனுதாரருக்கு அனுமதி வழங்க வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3) எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>

எதிருரையில் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்ற மனுவில் கண்டுள்ள சங்கதிகளை மறுத்தும், அசல் வழக்கானது 2016ம் ஆண்டில் தாக்கல் செய்துள்ள நிலையில், அதில் வழக்கு சொத்தாக ச.எண்.44/1B என்பதை மட்டும் தெளிவாக குறிப்பிட்டுள்ளதும், வழக்குரையுடன் சேர்த்து தாக்கல் செய்யப்பட்டு மாதிரி வரைபடத்திலும் வழக்கு சொத்தாக ச.எண்.44/1B–ஐ குறிப்பிட்டுள்ளதும், வழக்கினை வழக்கு விசாரணைக்காக தேதியிடப்பட்ட நிலையில், இதே மனுதாரரால் நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி IA No. 3/2023 தாக்கல் செய்யப்பட்டு அது நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டுள்ள நிலையில், வழக்கினை காலநீட்டிப்பு செய்யவேண்டுமென்ற நோக்கத்தில் தற்போது வா.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டுவிட்ட நிலையில், வழக்கு சொத்தில் ச.எண். 44/ 1C சேர்க்கபடவேண்டுமென்று இம்மனுவை தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர், தனது மனுவில் பொய்யான காரணத்தை கூறி மனுதாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்கள் நேர்மையான வழக்கைப் பெற்றிருந்தால், அவர்கள் விசாரணையைத் தொடங்குவதற்கு முன் முந்தைய கட்டத்தில் மனுவில் கூறப்பட்ட குறைபாட்டை சரிசெய்ய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றும், இது பிரதிவாதிகளை துன்புறுத்துவதற்காகவும், சட்டவிரோத ஆதாயம் பெறுவதற்காக மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனு தாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே வழக்கின் தன்மை மற்றும் வழக்கை நடத்துவதில் மனுதாரர்களின் செயல்பாடுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும் மேலும், திருத்த மனுவை தாக்கல் செய்வதில் விதிகள் மற்றும்

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.03.06 17:08:51 +0530

விதிமுறைகளை பின்பற்றாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிர்பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில்,

"மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா?" என்பதேயாகும்.

தீர்வு

6) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. அசல் வழக்கில் மனுதாரர் 3ம் வாதி என்றும், அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகைக்காகவும், அதனை தொடர்ந்து நிரந்தர தடையுறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி 04.11.2016 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் சொத்து விபரத்தில் சர்வே எண். 44/1C –யினை 44/1B–யுடன் சேர்த்து காட்டும்போது தவறுதலாகக் டைப் மிஸ்டேக்கில் சர்வே எண்.44/1C விடுபட்டுவிட்டது என்றும், அது தட்டச்சு பிழையால் ஏற்பட்டது என்றும், அது குறித்து தனக்கு தற்போது தான் தெரிய வந்தது என்றும், எனவே தன்னால் கூறாமல் விட்டு போன புல எண். 44/1C –யை சொத்து விபரத்தில் சேர்த்து மனுவில் கண்டபடி திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்துள்ளதை ஆராய்கையில், இது குறித்து உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6 விதி 17 ஆனது வழக்குரையை திருத்துவது குறித்து கீழ்க்கண்டவாறு கூறியுள்ளது [17. **Amendment of pleadings**– The Court may at any stage of the proceedings allow either party to alter or amend his pleadings in such manner and on such terms as may be just, and all such amendments shall be made as may be necessary for the purpose of determining the real questions in controversy between the parties:

Provided that no application for amendment shall be allowed after the trial has commenced, unless the Court comes to the conclusion that inspite of due diligence, the party could not have raised the matter before the commencement of trial.].

7) மேற்படி சட்ட உட்கூறுகளை கருத்தில் கொண்டு ஆராய்கையில், வழக்குரை திருத்த மனுவானது வழக்கு விசாரணை தொடங்கிய பின்னிட்டு தாக்கல் செய்யப்படும் போது அம்மனுவில் கோரியுள்ள திருத்தம் குறித்து வழக்கு விசாரணைக்கு முன்பாகவே தரப்பினரால் போனதுமான காரணங்களால் எடுத்துரைக்கப்படவில்லை என்பது குறித்து

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.03.06 17:08:56 +0530

தளரா ஊக்கத்துடன் நீதிமன்றம் முடிவுக்கு வந்தால் ஒழிய வழக்கு விசாரணைக்கு பின்னிட்ட வழக்குரை திருத்த மனுவினை அனுமதிக்ககூடாது என்று கூறியுள்ளதை அறியமுடிகிறது. இதனை கருத்தில் கொண்டு இவ்வழக்கின் சங்கதிகளை ஆராய்கையில், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் வாதப்படி 2016ம் ஆண்டிலேயே இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதும், பின்னிட்டு 8 ஆண்டுகள் ஆன நிலையில் வாதி தரப்பில் வா.சா.1 விசாரிக்கப்பட்டுள்ளதும், அதன் பின்னிட்டு பல்வேறு வாய்தாக்கள் அளிக்கப்பட்டு வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக வாய்தா அளித்துள்ள நிலையில், தற்போது தான் தாவா சொத்து விவரத்தில் சர்வே எண் தவறாக விடபட்டுவிட்டது தெரியவந்தது என்றும், எனவே சர்வே எண்ணையே திருத்தம் செய்ய வேண்டும் என்றும், மனுதாரர் கூறியுள்ள காரணம் முற்றிலும் ஏற்கத்தக்கதல்ல என்ற எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் வாதம் ஏற்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

8) மேலும் அசல் வழக்கில் 3ம் வாதி வா.சா.1–ஆக 04.09.2023ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளதும், பின்னிட்டு வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக தொடர்ச்சிக்காக வாய்தா அளிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதையும் கருத்தில் கொண்டு பார்க்கையில் மனுதாரர் போதுமான வாய்பிருந்தும் வழக்கு விசாரணைக்கு முன்பாகவே மனுவில் கோரியுள்ள வழக்கு சொத்தின் திருத்தம் குறித்து மனு செய்து கொள்ளாமல் பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா அளிக்கப்பட்ட நிலையில், வழக்கின் குறைகளை இட்டு நிரப்புவதற்காக (Fill up the lacuna) மட்டுமே மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதியும், மேலும் வழக்கின் சொத்தாக புது சொத்தை சேர்க்க கோருவதன் மூலம் வழக்கின் அடிப்படை கட்டமைப்பையே மாற்றி அமைத்துவிடும் என்றும், அதன் மூலம் எதிர்மனுதாரருக்கு புதிதாக கட்சி செய்ய அவசியம் ஏற்படும் என்ற நிலையிலும், இம்மனுவை அனுமதிப்பது எதிர்மனுமாரர்/பிரதிவாதிகளுக்கு ஈடுசெய்ய முடியா இழப்பு ஏற்படும் என்பதாகவே இந்நீதிமன்றம் கருதியும், மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்று கருதியும், மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.03.06 17:09:04 +0530

2025–ம் ஆண்டு மார்ச் மாதம் 06–ம் நாள் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு அவையறியப் பகரப்பட்டது.

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.03.06 17:09:10 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.

<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.03.06 17:09:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.